திருப்பூர் வடக்கு தொகுதிக்கான விளையாட்டுப் போட்டிகள்!

திராவிடப் பொங்கல் - சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் - மேயர் ந.தினேஷ்குமார் அறிக்கை!

திருப்பூர், ஜன.12- திருப்பூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக் கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டு தலின் பேரில் திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகு திக்கான விளையாட்டுப் போட்டிகள் வருகிற 12.01.2026 திங்கட்கிழமை காலை 09.00 மணி முதல் மாலை வரையிலும், 13.01.2026 செவ்வாய்க் கிழமை காலை 09.00 மணி முதல் மாலை வரை இரண்டு நாட்கள் திருப்பூர், பி.என்.ரோடு, பாண்டியன் நகர், பஸ் ஸ்டாப் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் கீழ்க்கண்ட விதிமுறைகளின்படி நடக்கவுள்ளயது.

12.01.2026 திங்கட் கிழமை திருப்பூர் வடக்கு மாநகர மண்டலம் 1, மண்டலம் 2, திருப்பூர் ஒன்றியம் ஆகிய பகுதிகளைச் சார்ந்தவர்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்.

விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விதி முறைகள்

1.கபாடி ஆண்கள், பெண்கள் வயது வரம்பு இல்லை

2. கிரிக்கெட் ஆண்கள், பெண்கள் வயது வரம்பு இல்லை

3. மிதிவண்டி போட்டி (Slow Cycle Race) ஆண்கள், பெண்கள் வயது வரம்பு இல்லை

4. கோகோ ஆண்கள் மற்றும் பெண்கள் வயது வரம்பு இல்லை

5. மேற்கண்ட விளையாட்டுகளில் அந்தந்த மாநகரம், 1, 2, மண்டலங்கள், நகரம், ஒன்றியத்தில் வசிப்பவர்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்.

6. அந்தந்த பகுதியில் வசிப்பவர்கள் ஆதார் அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

7. 12.01.2026ம் தேதி அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

8. நுழைவுக் கட்டணம் ஏதும் இல்லை.

மேற்கண்ட விளையாட்டுப் போட்டி களில் வெற்றி பெறும் 4 அணிகளுக்கு கீழ்க்கண்ட பரிசுகள் வழங்கப்படும்.

முதல் பரிசாக ரூ.5,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/ மற்றும் பரிசுக் கோப்பை யும், நான்காம் பரிசாக ரூ.2,000/ மற்றும் பரிசுக் கோப்பையும் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட போட்டிகளில் வெற்றி பெறும் நான்கு அணிகளும் 13.01. 2026ம் தேதி நடைபெறும் வடக்கு மாவட்ட தொகுதி கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

ஈ. தங்கராஜ், வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் 88386 92465, விஸ்வநாதன், திருப்பூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் 90038 05695, கொ.ராமதாஸ், பகுதி கழக செயலாளர், 15 வேலம்பாளையம் 98432 15015, மின்னல் நாகராஜ், பகுதி கழக செயலாளர், அண்ணா குடியிருப்பு 98949 76761, ஜோதி பகுதி கழக செயலாளர், பாண்டியன் நகர், 94431 43932, போலார் சம்பத்குமார், பகுதி கழக செயலாளர், கொங்கு நகர், 95432 77277, நல்லாசிரியர் ஆர்.முத்துசாமி (கபாடி) 94433 39299,

13.01.2025 செவ்வாய்க் கிழமை காலை 09.00 மணி, வடக்கு மாவட்ட அணிகள் போட்டிகள் நடைபெறும்

கலந்து கொள்ளும் அணிகள்: திருப்பூர் மாநகரம் மண்டலம் 1 பரிசு பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்) திருப்பூர் மாநகரம் மண்டலம் 2 பரிசு பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்)அவினாசி நகரம் வெற்றி பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்)

அவினாசி ஒன்றியம் வெற்றி பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்) அன்னூர் ஒன்றியம் வெற்றி பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்) திருமுருகன் பூண்டி நகரம் வெற்றி பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்)

வடக்கு மாவட்ட அணிகளுக்கு நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு பரிசுத் தொகை : கபாடி மற்றும் கிரிக்கெட் போட்டிகளுக்கு முதல் பரிசாக ரூ.25,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூ.15,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூ.10,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், நான்காம் பரிசாக ரூ.10,000/ மற்றும் பரிசுக் கோப்பையும் வழங்கப்படுகிறது.

கோ கோ போட்டிக்கு முதல் பரிசாக ரூ.15,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூ.10,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், நான்காம் பரிசாக ரூ.5,000/ மற்றும் பரிசுக் கோப்பையும்,

மிதிவண்டி (Slow Cycle Race) போட்டிக்கு முதல் பரிசாக ரூ.5,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், நான்காம் பரிசாக ரூ.2,000/ மற்றும் பரிசுக் கோப்பையும் 13.01.2026ம் தேதி மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்குப் பின் பரிசுகள் வழங்கப்படும்.

எனவே, அந்தந்த பகுதியிலுள்ள பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எம்.இ.தேவநிதி நிகழ்ச்சி ஏற்பாடு இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

எழும்பூர் 58வது வட்டத்தில் தமிழர் திருநாள் சமத்துவப் பொங்கல்விழா!

அமைச்சர் பி.கே.சேகர் பாபு - தயாநிதி மாறன் எம்.பி. தொடங்கி வைக்கின்றனர்

சென்னை,ஜன.12- சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதி எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, 58 வது வட்டத்தில் தமிழ்ப்புத் தாண்டு, சமத்துவ பொங்கல் விழா திராவிடப் பொங்கல் விழா (வியாழக்கிழமை) 15.1.2026 காலை 11 மணிக்கு தி.மு.க. மற்றும் தாக்கர் தெரு குடியிருப்போர் இணைந்து நடத்தும் பொங்கல் விழா நிகழ்ச்சியை தலைமைக் கழகப் பேச்சார் எழும்பூர் எம்.இ.தேவநிதி ஏற்பாட்டில் நடைபெறுகின்றது.

15.1.2026 அன்று காலை 6 மணிக்கு, கோலப்போட்டியும், 11 மணிக்கு இளைஞர் மற்றும் ஆண், பெண்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இசை நாற்காலி, உரியடித்தல், கயிறு இழுத்தல் போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடைபெறுகின்றது.

இப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா பொங்கல்(15.1.2026) அன்று காலை 11 மணிக்கு தாக்கர் தெருவில் நடைபெறுகின்றது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக மாவட்டக் கழகச்செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர் பாபு பரிசுகள் வங்கி சிறப்பிக்கிறார். இவ் விழால் தயாநிதி மாறன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, டி.குணசுந்தரி பாஸ்கர்,ஜெ.கிளாடிஸ் ஜேக்கப், இ.இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும் இவ் விழாவில் கே.எஸ்.எம்.நாதன், கோ.ஏகப்பன், கோ.மணி, வி.சுதாகர், புரசை ஜி. தாமோதரன், ஜெ.கிருஷ்ண மூர்த்தி, ஜெ.விஜயகுமார், புரசை எஸ்.குமார், வெ.மருதன், இரா.கலைவேந்தன், வி.விஜயகுமார், இராஜேஸ்வரி பூரீதர், கே.சீனிவாசன், எல்.சுகுமாறன், ஜெ.சிலம்பரசன், பி.எம்.ஜெயலட்சுமி, து.களரிமுத்து, பா.நாராயணன், ஜெ.சரவணன், ஜெ.வினாயகம், எஸ்.தினகரன், எஸ்.கண்ணன், தா.பாபுசேகர், மா.காந்தி, டி.விஸ்வநாதன், ஆரோக்கியம், ஆர்.புருஷோத்தமன், கி.புஷ்பராஜ்,மு.கமலக்கண்ணன், ரா.வெற்றிவேல், வி.நாகராஜ், ஆர்.தர்மதுரை, ஏ.கவிதா,அ.பிரம்மதேவன், மகாலட்சுமி, பி.எஸ்.வைஷ்ணவி, அசினா பேகம், ஏ.பாலாஜி, நேருபிரபாகரன், ச.கோ.கோமகன், ஆ.நித்தியராஜ், வே.மோகன், டி.வடிவேலு, மு.கிருஷ்ணன், பூ.சத்தீஷ்குமார், மு.சரவண்குமார், எல்.சுகுமாறன், எஸ்.சுரேஷ், அ.ஞானகுரு, எம்.நடராஜன், ஏ.சண்முகம், டி.சந்திரசேகர், இ.ஜெயகுமார், எஸ்.ஜெயகுமார், வி.கிருஷ்ணகுமார், என்.அழகர் சாமி, ஆர்.உதயசங்கர், ஆர்.பூபதி, பி.ரவிச்சந்திரன், ஐ.பத்மநாபன், பி.செந்தில்குமார், எஸ்.குப்புசாமி, கே.விஸ்வநாதன், ஜி.சதீஷ்குமார், பி.விஜயகுமார், டி.இளம்பரிதி, ராபர்ட் ஜான், எம்.நாகராஜன், ஒயிட்பில்ட் மொய்தீன், ஜெ.மகேந்திரன், எம்.எம்.மொய்தீன், பஞ்சா எஸ்.அருண், எஸ்.தாரிக், புரசை கே.மூர்த்தி, வே.பா.ரோஹித்குமார், நி.ஆஸ்டின், தி.ராஜ்குமார், ர.நித்திஷ் கிரிதரன், வி.மகாதேவன், ச.சதீஷ், ச.சூர்யா, மு.உதயநிதி, அ.ஜெகன், ஏ.வேலவன், கே.கே. சீனிவாசபெருமாள், எம்.இ.மகேஷ்குமார், தெ.திவாகரன், சு.குணா,கபில்குமார், ஜோ.சந்தோஷ்குமார், டி.சதீஷ்குமார், ஜெ.ஜெய்குமார், ஆ.சூர்யா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

விழாவிற்கு வருகை தரு வோரை தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி வரவேற்று நன்றி கூறுகிறார்.

எழும்பூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை,ஜன.12- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் ஏற்பாட்டில் “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1200 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 325வது நாளான நேற்று (10.1.2026), எழும்பூர் வடக்கு பகுதி, 78 அ வார்டு, அங்காளம்மன் கோயில் தெரு மைதானம் சந்திப்பு மற்றும் 65அ-வது வார்டு, ஜெயராம் நகர் ஆகிய 2 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக “ தகவல் தொழில் நுட்ப துறை மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள்” கலந்து கொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை ஊராட்சியில் ரூ.50.81லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட் மேல்நிலை நீர்தேக்க தொட்டி உள்ளிட்ட பல்வேறு கட்டிடங்களை எள செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்செல்வன், ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன்,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

மின் கழகத் தொ.மு.ச. மத்திய சங்கத் தேர்தல்

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை யில் இணைந்து செயல்பட்டு வரும் “தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்” (பதிவு எண் **38/CPT**, பேரவை இணைப்பு எண். 26) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்திட பேரவை இணைப் பொதுச்செயலாளர் திரு. **ஜெ.விஜய குமார்** அவர்கள் தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதன்படி கீழ்க்கண்ட தேர்தல் அட்டவணையின்படி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் கால அட்டவணை

மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் – 10.01.2026 நண்பகல் 12.30 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் – 19.01.2026 காலை 11.00 மணி

வேட்பு மனு தாக்கல் – 20.01.2026 காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை

வேட்புமனு பரிசீலனை –20.01.2026 மதியம் 1.30 மணி முதல் மதியம் 3.00 மணி வரை

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் – 20.01.2026 மதியம் 3.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல்–20.01.2026 மதியம் 3.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–20.01.2026 மாலை 6.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு–25.01.2026 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

குறிப்பு:–

1)தேர்தல் நடைமுறைகளான வேட்பு மனு படிவம் வழங்குதல், வேட்பு மனுத்தாக்கல், வேட்பு மனு பரிசீலனை, இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் உள்ளிட்டவை சென்னை அண்ணா சாலையில் உள்ள மின் கழக தொ.மு.ச. மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

2)வாக்குப் பதிவு, வாக்கு எண்ணிக்கை, முடிவுகள் அறிவித்தல் ஆகிய பணிகள் திருச்சி பெல் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறும்.

3) தேர்தல் விதிமுறைகள், வேட்பு மனு மற்றும் வேட்பாளர் கட்டணம் விபரங்கள் தேர்தல் ஆணையாளரால் தனியாக வெளியிடப்படும்.

தேர்தல் ஆணையரின் முடிவே இறுதியானது.

10.01.2026 **மு.சண்முகம்**, Ex.MP

இடம் : கலைஞரகம் பொதுச்செயலாளர்,

தொ.மு.ச. பேரவை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. நீலகிரி மண்டல மத்திய சங்க நிர்வாகிகள்

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. நீலகிரி மண்டலத்தின் (பதிவு எண். 296/NLG, பேரவை இணைப்பு எண். 1087) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 30.12.2025 அன்று பேரவைச் செயலாளர் **R.பெரியசாமி** அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய சங்க நிர்வாகிகள்

தலைவர் – M. ஸ்டீபன் **C25367** கோத்தகிரி

பொதுச்செயலாளர் – B. ஆனந்தன் **C21867** உதகை-I

பொருளாளர் – S. சரவணன் **C20111** மேட்டுப்பாளையம்-II

துணைத் தலைவர்கள்– 1) K. சரவணன் **C22175** கோத்தகிரி, 2) A. பிரபு **C25010** குன்னூர்

துணைச்செயலாளர்கள் –1) **N.**பாபு **C20775** குன்னூர், 2) N. யோகராஜ் **C20037** கூடலூர்

தலைமை நிலையச் செயலாளர் – N. ரவி **B02137** உதகை-II

செயற்குழு உறுப்பினர்கள்– 1) **K.**யோகரத்தினம் **C21028** கோத்தகிரி, 2) **M.**ரமேஷ் **C20649** கோத்தகிரி,3) **G.**ராஜேந்திரன் **C21844** கூடலூர், 4) **M.**திலீப் **C22045** உதகை-II, 5) **M.**சந்திரசேகர் **B4016** குன்னூர், 6) **M.**குமார் **C21193** உதகை-I, 7) **C.**அருண் **C29094** கோத்தகிரி, 8) **H.**சரவணன் **C21278** மேட்டுப்பாளையம்-II, 9) **D.N.**ஆர்த்திராஜ் **C24328** உதகை-II

இடம்:கலைஞரகம் **மு.சண்முகம்,** Ex.MP

நாள்:06.01.2026 பொதுச்செயலாளர்

தொ.மு.ச. பேரவை

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏ.எம். ராமசாமி

சனவரி 12 (2012)

கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

சேலம் மாவட்டம் – ஆத்தூர் நகரச் செயலாளராக நான்கு முறையும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை ஆத்தூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்

தலைமைக் கழகம்

தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பரமத்தி சண்முகம்

சனவரி 12 (2019)

இளமைப் பருவத்திலேயே பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பகுத்தறிவாளராகவும் – சிந்தனையாளராகவும் திகழ்ந்து, கழகம் தொடங்கிய பின்னர் கழகப் பணியாற்றியவர்.

கரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநில நெசவாளர் அணித் தலைவராகவும் – தொ.மு.ச. பேரவை துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.,

கரூர் நகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். “சன்முரசு” இதழ் ஆசிரியராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்றதுடன், நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.